**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 409/2019 P.W.7/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜா பிரவின் (எ) பிரவின் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ரஞ்சன் தாஸ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது மோரிஸ் மருத்துவமனையில் மயக்க மருந்து நிபுணராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 2012ம் வருடம் நான் குளச்சல் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அப்பொழுது 12.11.2012ம் தேதி அன்று பகல் 10.15 மணியளவில் நான் பணியில் இருந்தபோது 52 வயது மதிக்கத்தக்க ராமதாஸ் என்பவரை மணி என்பவர் காயசிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவர் தன்னை அன்று காலை 09.30 மணியளவில் தெரிந்த 1 நபர் அவரை குளச்சல் தீயணைப்பு துறை அலுவலகத்தின் அருகில் வைத்து கையாலும், கட்டையாலும் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** கீழ் வெட்டுப்பல் காணப்படவில்லை. அந்த பகுதியில் இரத்தக்கசிவு இருந்தது.

**காயம் 2.** இடது கை மற்றும் தலையில் தொடுவலி இருப்பதாக கூறினார்.

3. அவரை நான் மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் அங்கு உள்நோயாளியாக அனுமதித்து

சிகிச்சையளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவருக்கு அங்கு பல் துறைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு காயம் 1 கொடுங்காயம் என்று சான்று கொடுக்கப்பட்டது. அவருக்கு தலை மற்றும் இடது கையில் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை என கருத்துரை வந்தது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் 1 கொடுங்காயம் எனவும் காயம் 2 சாதாரணகாயம் என்றும் நான் சான்று கொடுத்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. காயம் 1 ஆனது இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காயம் 2–யை காயம்பட்ட நபர் பொய்யாக கூறியிருக்கலாம் என்றால், வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. மேற்படி காயங்கள் அன்று காலை 09.00 மணிக்கு முன்னர் ஒரு மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், இல்லை. அதில் இரத்தக் கசிவு காணப்பட்டது.

2. மேற்படி 2 காயங்கள் தவிர்த்து காயம்பட்ட நபருக்கு வேறு காயங்கள் இல்லை என்றால், சரிதான். நுண்கதிர் எடுக்கப்பட்ட விவரங்கள் எனது காயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால், காயச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மருத்துவப் பதிவேடுகளிலும் உள்ளது. போலிசார் என்னை எப்பொழுது விசாரணை செய்தார்கள் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.